A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 15 / 2024**

திருமதி S. அலமேலு,
க.எண். 193, கிழக்கு தெரு, சிலம்பூர் தெற்கு,
ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம் – 608 901.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு P. அன்பழகன், வழக்கறிஞர்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

3. உதவி மின் பொறியாளர்/ இ.கா./தெற்கு/ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

. . . எதிர்மனுதாரர்
(திரு M. செல்லப்பாங்கி, செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர், (i/c)
திரு B. சக்திவேல், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்
திரு R. சுந்தரேசன், உதவி மின் பொறியாளர்/ இ.கா./தெற்கு/ஆண்டிமடம்)

**மனு பெறப்பட்ட நாள்: 09-02-2024**

**கேட்புரை நாள்: 23-04-2024**

**ஆணை நாள்: 07-05-2024**

09.02.2024 அன்று பெறப்பட்ட திருமதி S. அலமேலு, க.எண். 193, கிழக்கு தெரு, சிலம்பூர் தெற்கு, ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம் – 608 901 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 15/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 23.04.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது நிலத்தில் நடப்பட்டுள்ள மின் கம்பங்களை அகற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது நிலத்தில் நடப்பட்டுள்ள மின் கம்பங்களை தனக்கு இடையூறு இல்லாத வகையில் மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரிடம் வாய்மொழியாக அனுமதி பெற்றதாக திரு அன்பழகன் பிரிவு அலுவலகத்தில் கடிதம் அளித்ததை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தனது நிலத்தில் அமைக்கப்பட்ட மின்கம்பங்களை அகற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 10.09.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் 02.12.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 02.12.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர் திருமதி.S.அலமேலு க/பெ.சர்க்கரை அவர்களின் புகாரின் தன்மையினை ஆராய்ந்து பார்த்த வகையில் தனது நிலத்தின் அருகாமையில் திரு.அன்பழகன் த/பெ.ராமசாமி அவர்களுக்கு சாதாரண முன்னுரிமை திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வழங்க 10.07.2023 அன்று விஸ்தரிப்பு பணிகள் மேற்கொண்ட போது அருகிலுள்ள நிலத்தின் உரிமையாளரான திரு.R.கருணாநிதி த/பெ.ராமசாமி ஆதனக்குறிச்சி அவர்கள் தனது நிலத்தின் வழியாக மின் கட்டமைப்புக்கான விஸ்தரிப்பு ஏதும் மேற்கொள்ள கூடாது என ஆட்சேபனை தெரிவித்துள்ளதால் மாற்று வழியாக மின்பாதை அமைக்க திருமதி.S.அலமேலு க/பெ.சர்க்கரை புகார்தாரராகிய தங்களின் மகன் திரு.ஞானவேல் அவர்களிடம் வாய்மொழியாக அனுமதி பெற்றதாக திரு.அன்பழகன் த/பெ.ராமசாமி அவர்கள் 04.09.2023 அன்று பிரிவு அலுவலகத்தில் கடிதம் அளித்ததன் அடிப்படையில் தங்களின் மகன் திரு ஞானவேல் அவர்களுடன் கூட்டாக கள ஆய்வு செய்து தங்களுக்கு சொந்தமான முந்திரி மரங்களுக்கு இடையூறு இல்லாத வகையில் வரப்பு ஓரமாக ஒரு மின்கம்பத்தை மட்டும் சுமார் 3 அடி மட்டும் தள்ளியமைக்க கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் திரு.ஞானவேல் அவர்களின் முன்னிலையில் தங்களுக்கு சொந்தமான இடம் என்று சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் உட்புறமாக 26.09.2023 அன்று மின் கம்பம் மாற்றியமைக்கபட்டுள்ளது தெரிய வருகிறது.*

*மேலும் புகார்தாரராகிய திருமதி.S.அலமேலு க/பெ.சர்க்கரை ஆகிய தங்களின் மகன் மின்கம்பத்தை மாற்றியமைக்க ஒப்புதல் அளித்ததை தாங்களும் விசாரணையில் தெரிவித்தீர்கள்.*

*தங்களின் அனுமதியின்றி தங்கள் இடத்தில் நடப்பட்டதாக கூறப்பட்ட மின்கம்பமானது தாங்கள் கேட்டுக் கொண்டபடி உரிய இடத்தில் மாற்றப்பட்டுவிட்டது. மேலும் மின்பாதை அமைக்க இடையூறாக இருந்த மரக்கிளைகள் மட்டுமே வெட்டப்பட்டதும் மரங்கள் வேரோடு அகற்றப்படவில்லை என்பதை தாங்களும் விசாரணையின் போது தெரிவித்தீர்கள்.*

*எனவே தங்கள் புகாரானது சரி செய்யப்பட்டுவிட்டதென்பதால் இந்த புகார் மனு மீது தொடர் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை எனக் கருதி இப்புகாரானது இம்மன்றத்தில் முற்றுப் பெறுகிறது என இம்மன்றம் தீர்ப்பளித்து உத்தரவிடுகின்றது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.04.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு P. அன்பழகன், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. செல்லப்பாங்கி, செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர் (i/c), திரு B. சக்திவேல், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம் மற்றும் திரு R. சுந்தரேசன், உதவி மின் பொறியாளர்/ இ.கா./தெற்கு/ஆண்டிமடம், பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும், மேற்படி தன்னுடைய புகாரின் மீது மின் கம்பத்தை அகற்றுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை மாறாக பக்கத்தில் உள்ள நிலத்திற்கும் மின் கம்பத்தை பொதுவாக வரப்பின் மேல் மாற்றி அமைத்துள்ளதாகவும், மேலும் புகார் நிலுவையில் உள்ள போதே மேற்கூறிய நபருக்கு மின் பெட்டியை அமைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் குறுக்கு வழியில் மின் இணைப்பு பெறவும் முயற்சிக்கின்றதாகவும், ஆதலால், புகாரின் மீது தீர்வு கிடைக்கும் வரை மேற்படி மின் இணைப்பை நிறுத்தி வைக்கும்படியும், மேலும் குறைதீர்மன்றத்திற்கு அழைக்கும்போது தன் தரப்பு நியாயத்தை முழுமையாக விளக்க அனுமதிக்கவில்லை எனவும், மேலும் மின் இணைப்பை பெறுவோருக்கும் தன் நிலத்திற்கும் எந்தவித நேரடி எல்லை தொடர்பும் கிடையாது எனவும், அவர்கள் 200 அடி தூரத்திலேயே நேரடியாக மின்தடம் அமைக்க இடம் இருக்கும்போதே உள்நோக்கத்தோடு சுமார் ½ கி.மீ தூரம் சுற்றி வளைத்து மேலும் 3 நபர்களின் நிலத்தின் வழியாக தங்கள் நிலத்தில் மின்தடம் அமைத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளர்.

5.3 தன் கணவர் 2005 ஆம் ஆண்டு இறந்துவிட்டதாகவும், அதன்பிறகு பட்டா எண்:501 மற்றும் 527ல் உள்ள 90செண்ட் நிலத்திலிருந்து வரும் மகசூலை வைத்துதான் ஜீவித்து வருவதாகவும், மேலும் தங்கள் நிலத்திற்கு அருகில் குடியிருப்பு வந்துவிட்டதாகவும், தானும் 2 வருடத்தில் வீடு கட்ட திட்டமிட்டுள்ளதாகவும், ஆதலால், எதிர்கால நலன் கருதி இந்த மின்வழி தடத்தை அப்புறப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 அரியலூர் கோட்டம் ஆண்டிமடம் உபகோட்டம், இளமின்பொறியாளர்/இயக்கம்/ பாராமரிப்பு / தெற்கு/ ஆண்டிமடம் பிரிவுக்கு உட்பட்ட சிலம்பூர் பகிர்மானத்தில் திரு. R. அன்பழகன் த/பெ ராமசாமி அவர்களுக்கு சாதாரண முன்னுரிமை திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வழங்க அனுமதி எண்.14.685/A26/35/2021-22 நாள்.15.02.2022-ன் படி 10.07.2023 அன்று விஸ்தரிப்பு பணிகள் மேற்கொண்ட போது அருகில் உள்ள நிலத்தின் (புல எண் 207/1)-ன் வழியே மின் கட்டமைப்புக்கான விஸ்தரிப்பு பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது என ஆட்சேபனை செய்ததுடன் உடனடியாக அரியலூர் மாவட்ட ஆட்சியரிடமும் 10.07.2023 அன்று ஆட்சேபனை மனு அளித்ததால் மின் விஸ்தரிப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 எனவே ஆட்சேபனை தெரிவித்த மேற்கண்ட திரு.R.கருணநிதி த/பெ ராமசாமி. ஆதனக்குறிச்சி அவர்களிடம் சுமூகமாக பேசி ஒப்புதல் பெற்றோ அல்லது மாற்றுபாதை இருந்தாலோ தகவல் தெரிவிக்கும்படி மேற்கண்ட திரு.R.அன்பழகன் த/பெ ராமசாமி சிலம்பூர் அவர்களுக்கு 17.07.2023 நாளிட்ட கடிதம் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புகை அட்டையும் பெறப்பட்டதாகவும், இந்நிலையில் மாற்றுவழியில் மின் பாதை அமைக்க திருமதி S.அலமேலு க/பெ லேட் திரு.சர்க்கரை மகன் திரு.ஞானவேல் அவர்களிடம் (பட்டா எண்.501&527) வாய்மொழியாக அனுமதி பெற்றதாக திரு.R.அன்பழகன் த/பெ ராமசாமி அவர்கள் 04.09.2023 அன்று இப்பிரிவில் கடிதம் அளித்தார் என்றும் அதனைத் தொடர்ந்து, வாய்மொழியாக ஒப்புதல் அளித்த திரு. ஞானவேல் த/பெ. சர்க்கரை அவர்களிடம் ஒப்புதல் குறித்து உறுதி செய்யப்பட்டு, மின் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அப்போது மின் பாதை அமைப்பதற்கு இடையூறாக இருந்த ஒரு சில முந்திரி மரக்கிளைகள் மட்டுமே வெட்டப்பட்டதாகவும், முந்திரி மரங்களின் பெரும்பகுதியோ, அல்லது அடியோடோ எந்த மரமும் வெட்டப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்நிலையில் திருமதி. S அலமேலு. க/பெ (லேட்) சர்க்கரை, அவர்கள் தனது நிலத்தில் மின் பாதை அமைக்கக் கூடாது எனவும் அமைக்கப்பட்ட மின் கம்பங்களை அகற்ற வேண்டியும் நுகர்வோர் குறைதீர் மன்ற வலைதளத்தில் 10.09.2023 அன்று புகார் அளித்ததை தொடர்ந்து, திருமதி S. அலமேலு த/பெ. (லேட்) திரு. சர்க்கரை அவர்களின் மகன் திரு ஞானவேல் அவர்களுடன் கூட்டாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டு புகார்தாரர் முந்திரி மரங்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும், வரப்பை ஒட்டியும் ஒரே ஒரு மின் கம்பத்தை மட்டும் சுமார் 3 அடி மட்டும் தள்ளியமைக்க கேட்டுக்கொண்டதால் திரு.ஞானவேல் த/பெ.சர்க்கரை அவர்களின் முன்னிலையில் தனக்கு சொந்தமான இடம் என்று அவரால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் வரப்புக்கு உட்புறமாக மின் கம்பம் 20.09.2023 அன்று அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதாகவும், இதன்படி திருமதி S.அலமேலு க/பெ. (லேட்) திரு.சர்க்கரை என்பவரின் புகார் மனுவிற்கு உரிய தீர்வு மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இதன்பின்னர் திரு.S. பழமலை, கிழக்கு தெரு, முள்ளுகுறிச்சி, கிராமம் என்பவர் தனது நிலத்தில் (புல எண். 201/1848) மின் கம்பம் நடப்பட்டுள்ளது எனவும், அதனை

அகற்றுமாறும் 18.10.2023 அன்று ஆண்டிமடம்/தெற்கு பிரிவில் தடங்கல் மனு அளித்ததாகவும், இதனை தொடர்ந்து மேற்படி இடத்தை கள ஆய்வு செய்ததில், மின் கம்பம் நடப்பட்டுள்ள ஒரே இடத்திற்கு திரு.ஞானவேல் த/பெ.சர்க்கரை அவர்களும் மற்றும் திரு.S. பழமலை, முள்ளுகுறிச்சி அவர்களும் உரிமை கொண்டாடுவதாகவும், இதனால் உறுதியான எந்த முடிவும் எட்டப்படாத நிலையில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 எனவே மேற்கண்ட திரு. R. அன்பழகன் த/பெ.ராமசாமி அவர்களுக்கு 26.09.2023 அன்றிலிருந்து இன்று வரை மின் இணைப்பு வழங்க நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலத்தில் அமைக்கப்பட்ட மின் கம்பத்தை பொதுவாக வரப்பின் மேல் மாற்றி அமைக்குமாறும், மேலும் மின் இணைப்பை பெறுவோருக்கும் தன் நிலத்திற்கும் எந்தவித நேரடி எல்லை தொடர்பும் கிடையாது 200 அடி தூரத்திலேயே நேரடியாக மின் தடம் அமைக்க இடம் இருக்கும் பொழுது உள்நோக்கத்துடன் சுமார் 1/2 கி.மீ தூரம் சுற்றி வளைத்து மேலும் 3 நபர்களின் நிலத்தின் வழியாக மின் தடம் அமைத்துள்ளதாகவும், மேலும் தன் நிலத்தின் அருகில் குடியிருப்பு வந்து விட்டதாகவும், தானும் 2 வருடத்தில் வீடு கட்ட திட்டமிட்டுள்ளதாகவும் ஆதலால் எதிர்கால நலன் கருதி இந்த மின்வழிபாதை தடத்தை அப்புறப்படுத்துமாறு முறையிட்டுள்ளார்.

7.3 அரியலூர் கோட்டம் ஆண்டிமடம் உபகோட்டம், இளமின்பொறியாளர்/இயக்கம்/ பாராமரிப்பு / தெற்கு/ ஆண்டிமடம் பிரிவுக்கு உட்பட்ட சிலம்பூர் பகிர்மானத்தில் திரு. R. அன்பழகன் த/பெ ராமசாமி அவர்களுக்கு சாதாரண முன்னுரிமை திட்டத்தில் விவசாய மின் இணைப்பு வழங்க அனுமதி எண்.14.685/A26/35/2021-22 நாள்.15.02.2022-ன் படி 10.07.2023 அன்று விஸ்தரிப்பு பணிகள் மேற்கொண்ட போது அருகில் உள்ள

நிலத்தின் (புல எண் 207/1)–ன் வழியே மின் கட்டமைப்புக்கான விஸ்தரிப்பு பணிகள் ஏதும் மேற்கொள்ள கூடாது என ஆட்சேபனை செய்ததுடன் உடனடியாக அரியலூர் மாவட்ட ஆட்சியரிடமும் 10.07.2023 அன்று ஆட்சேபனை மனு அளித்ததால் மின் விஸ்தரிப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 எனவே ஆட்சேபனை தெரிவித்த மேற்கண்ட திரு.R.கருணாநிதி த/பெ ராமசாமி. ஆதனக்குறிச்சி அவர்களிடம் சுமூகமாக பேசி ஒப்புதல் பெற்றோ அல்லது மாற்றுபாதை இருந்தாலோ தகவல் தெரிவிக்கும்படி மேற்கண்ட திரு.R.அன்பழகன் த/பெ ராமசாமி சிலம்பூர் அவர்களுக்கு 17.07.2023 நாளிட்ட கடிதம் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு அதற்கான ஒப்புகை அட்டையும் பெறப்பட்டதாகவும், இந்நிலையில் மாற்றுவழியில் மின் பாதை அமைக்க திருமதி S.அலமேலு க/பெ லேட் திரு.சர்க்கரை மகன் திரு.ஞானவேல் அவர்களிடம் (பட்டா எண்.501&527) வாய்மொழியாக அனுமதி பெற்றதாக திரு.R.அன்பழகன் த/பெ ராமசாமி அவர்கள் 04.09.2023 அன்று இப்பிரிவில் கடிதம் அளித்தார் என்றும் அதனைத் தொடர்ந்து, வாய்மொழியாக ஒப்புதல் அளித்த திரு. ஞானவேல் த/பெ. சர்க்கரை அவர்களிடம் ஒப்புதல் குறித்து உறுதி செய்யப்பட்டு, மின் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அப்போது மின் பாதை அமைப்பதற்கு இடையூறாக இருந்த ஒரு சில முந்திரி மரக்கிளைகள் மட்டுமே வெட்டப்பட்டதாகவும், முந்திரி மரங்களுக்கு மரங்களின் பெரும்பகுதியோ, அல்லது அடியோடோ எந்த மரமும் வெட்டப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 இந்நிலையில் திருமதி. S.அலமேலு. க/பெ (லேட்) சர்க்கரை, அவர்கள் தனது நிலத்தில் மின் பாதை அமைக்கக் கூடாது எனவும் அமைக்கப்பட்ட மின் கம்பங்களை அகற்ற வேண்டியும் நுகர்வோர் குறைதீர் மன்ற வலைதளத்தில் 10.09.2023 அன்று புகார் அளித்ததை தொடர்ந்து, திருமதி S. அலமேலு த/பெ. (லேட்) திரு. சர்க்கரை அவர்களின் மகன் திரு ஞானவேல் அவர்களுடன் கூட்டாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டு புகார்தாரர் முந்தரிக்கு இடையூறு இல்லாத வகையிலும், வரப்பை ஒட்டியும் ஒரே ஒரு மின் கம்பத்தை மட்டும் சுமார் 3 அடி மட்டும் தள்ளியமைக்க கேட்டுக்கொண்டதால் திரு.ஞானவேல் த/பெ.சர்க்கரை அவர்களின் முன்னிலையில் தனக்கு சொந்தமான இடம் என்று அவரால் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் வரப்புக்கு உட்புறமாக மின் கம்பம்

20.09.2023 அன்று அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டதாகவும், இதன்படி திருமதி S.அலமேலு க/பெ. (லேட்) திரு.சர்க்கரை என்பவரின் புகார் மனுவிற்கு உரிய தீர்வு மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 கேட்புரையின் போது மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் ஆஜராகி வாதிட்ட நிலையில் மின் கம்பம் அமைக்க முறையீட்டாளர் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் நடந்ததா என்பதற்கு ஆம் மேல்முறையீட்டாளர் அவர்களுடைய மகன் ஞானவேல் கூட்டாக ஆய்வின் மின்கம்பம் 26.09.2023 அன்று அமைக்கப்பட்டதை மறுதலிக்கவில்லை. ஆனால் தற்சமயம் அந்த மின் பாதையை மாற்றி அமைக்கும் முறையீட்டு மனுவில் விவசாய மின் இணைப்பு கோரும் நுகர்வோருக்கு மின் இணைப்பு பாதை அமைக்க உரிமதாரருக்கு அதிகாரம் உள்ளதா என ஆராய விரும்புகறேன்.

7.7 இது சம்பந்தமாக, இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***
>
> *Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.8 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.9 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.10 மேலும், இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) –ஐ ஆராய விரும்புகிறேன்.

***68. Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*

*(2) The provisions contained in sub-section (1) shall not apply-*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer"*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

7.11 மேலும் மின்பாதை அமைக்கும் பாதை வழிகள் யாவும் அடுத்தடுத்து இருப்பதால் வயல்களின் வழியேதான் மின்பாதை அமைக்க இயலும். உரிமதாரர் மேல்முறையீட்டாளருடன் கள ஆய்வில் நிறுவப்பட்ட மின்பாதை மேல்முறையீட்டாளரின் வரப்பின் ஓரமாக உரிய பாதுகாப்பு உயரத்துடன் அதாவது 9M கம்பம் அமைத்து உள்ளதால் அது பாதுகாப்பு விதியில் கூறப்பட்ட உயமான 4.6 meters விட CEA (measure relating to safety and electric supply) Regulations 2010 இன் 58 வது விதி படி இருப்பதால் அமைக்கப்பட்ட மின்பாதை மற்றொரு விவசாயிருக்கு மின் இணைப்பு வழங்கும் அமைப்பாக இருப்பதால் உரிமதாரர் வேறு பாதையில் மாற்ற செய்ய வேண்டியதில்லை என முடிவு செய்யப்படுகிறது.

## 8.0 முடிவுரை:

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளரின் நிலத்திற்கும் மின்பாதைக்கும் உள்ள இடைவெளி பாதுகாப்பு சேமவிதிமுறைகளின்படி போதிய இடைவெளியுடன் இருப்பது தெரியவருகிறது. மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டே பணிகள் நடைபெற்றதாக தெரியவருகிறது. எனவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

(ii) மேலும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 15/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திருமதி S. அலமேலு, - By RPAD
க.எண். 193, கிழக்கு தெரு, சிலம்பூர் தெற்கு,
ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம் – 608 901.

2. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

3. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

4. உதவி மின் பொறியாளர்/ இ.கா./தெற்கு/ஆண்டிமடம்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33KV துணை மின் வளாகம்,
ஆண்டிமடம் அஞ்சல், அரியலூர் – 621 801.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 230 KV ஆட்டோ துணை வளாகம் பெரம்பலூர்,
நான்கு ரோடு அருகில், பெரம்பலூர் – 621 220.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.